விலை ரூபா 1·25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 87 | புரட்டாதி 5 | முஹற 5 | இதழ் 223
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 21- 9- 1985

★ இலங்கை தமிழர் 'மறுவாழ்வு நிதி'

## ரூ. 1½ கோடி திரட்ட தமிழக அரசு திட்டம்!

[சென்னை]

"இலங்கையில் இடம் பெறும் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு உதவும்முகமாக தமிழ்நாட்டில் 'இலங்கைத் தமிழர் மறுவாழ்வு நிதி' ஒன்று திரட்டப்படவுள்ளது. இந்த நிதிக்குசுமார் ஒன்றரைக் கோடி ரூபா திரட்டப்படும்.'

இத்தகவலை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. ரி. வி. அனரனி நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இம்மாதம் 24-ம் திகதி தமிழ்நாடு அரசினால் அனுஷ்டிக்கப்படும் ஹர்த்தால் தினத்தன்று இந்த நிதிசேகரிப்பு ஆரம்பமாகி இம்மாதம் 28 ம் திகதிவரை தொடர்ந்து சேகரிக்கப்படும் ஒரு ரூபாவில் இருந்து எவ்வளவு காசுவரையும் நிதி உதவி வழங்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்நாடு முத

(5ம் பக்கம் பார்க்க)

● யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க

# இலங்கைஅரசுயோசனை: ஈ.தே.வி.மு. ஏற்கமறுப்பு!

(புதுடில்லி)

**இலங்கையில் ஒருதலைப்பட்சமாக அமுலில் இருக்கும் யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்ய, இலங்கை அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று அமைக்கப்படும் என்று இலங்கை அரசு வெளியிட்டிருக்கும் யோசனையை ஈழம் தேசிய விடுதலை முன்னணி நேற்று ஏற்க மறுத்துவிட்டது**

இதற்கிடையே மேற்படி கண்காணிப்புக்குழு சம்பந்தமாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கையில் அரசசேவை நீதிபரிபாலன சேவை ஆகியவற்றில் முக்கிய பதவி வகித்தவர்கள் கண்காணிப்புக் குழுவில் நியமிக்கப்படுவார்கள் என்றும் வெளிநாட்டுத் தருப்புகளோ அல்லது வெளிநாட்டு பிரஜைகளோ இக்குழுவில் இடம் பெற மாட்டார்கள் என்றும் தெரிவித்திருந்தார்.

### இவர்கள் இடம் பெறுவர்?

நிலைமை இவ்வாறிருக்க கண்காணிப்புக்குழுவில் திரு. கொட்றி குணதிலகா (இயக்குநர் மார்கா நிறுவனம்), சர்வோதயத்தலைவர் திரு ஏ. ரி. ஆரியரத்னா, மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரு, பேராசிரியர் ரி. நடராஜா ஆகியோரும் இடம்பெறலாம் எனத்தெரிய வருகிறது

(8 ம் பக்கம் பார்க்க)

'ரொமேஷ்' தனித்தனி சந்திப்பு

(புதுடில்லி)

ஈழதேசிய விடுதலை முன்னணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைப்பேச்சுக்களை புதுடில்லியில் நடத்திய இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி, நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர்களையும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர்களையும் தனித்தனியாக சந்தித்து ஆலோசனை நடத்தினார். நேற்று ரெலோ, ஈரோஸ் தலைவர்களைத் தனியாகச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

★ தமிழ்நாட்டில் 24ம் திகதி

## ஹர்த்தால்; உண்ணாவிரதம்! விடுமுறையாக அறிவிப்பு

[சென்னை]

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை கண்டித்தும் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களில் தமிழ்நாட்டு மக்கள் தாம் பங்கேற்கும் வகையிலும் இம்மாதம் 24-ம் திகதி பொது ஹர்த்தால் தினமாக அனுஷ்டிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இத்தகவலை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. ரி. வி. அன்ரனி நேற்று சென்னையில் தெரிவித்தார்.

அண்மையில் சென்னையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையில் கூடிய அனைத்துக்கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய இந்த ஹர்த்தால் தமிழக அரசினால் அனுஷ்டிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அன்று காலை 6 மணிக்குத் தொடங்கும் ஹர்த்தாலும், பொது உண்ணாவிரதமும் மாலை 6 மணி வரை நடைபெறும்.

இந்த நாளை தமிழ்நாடு அரசு பொதுவிடுமுறை நாளாக

5-ம் பக்கம் பார்க்க)

## பூகம்பத்தில் 3000 பேர் பலி!

(மெக்சிக்கோசிற்றி)

மெக்சிக்கோவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பெரும் பூகம்பத்தில் சுமார் 3.000 பேர் இறந்துள்ளனர் என்று கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாகிஸ்தான் கப்பலில் 22கொள்கலன்களில் ஆயுதம்!

(கொழும்பு)

"கொழும்புத் துறைமுகத்திற்கு பாகிஸ்தானிலிருந்து கப்பலொன்று வந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது அந்தக் கப்பலில் இருபத்து இரண்டு கொள்கலன்களில் ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன இந்நிலையிருந்தும் எமக்கு நிம்மதியில்லை" என்று மதவாச்சி எம். பி திரு மைத்திரிபால சேனநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கவலை தெரிவித்தார்.

அவசரகாலநிலை நீடிப்பு மீதான விவாதத்தில் அவர் மேலும் பேசுகையில்; ' அரசாங்கம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்துவருகிறது, இராணுவத்திற்கு அதிகமானோர் நியமிக்கப்படுகின்றனர். இருந்தும் எமக்கு நிம்மதியில்லை" என்று கூறினார். (ச)

## "இதோ சில எலும்புத்துண்டு"

(யாழ்ப்பாணம்)

'இதோ சில எலும்புத் துண்டுகள்' என்ற தலைப்பில் 'ஈழம் செய்திப்பலகை கவரொட்டியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

3-ம் கட்ட பேச்சுக்கு ஸ்ரீலங்கா அரசு முன்வைத்த பிரேரணைகள் ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாணக்

(5-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர் வெட்டப்பட்டார்! பாதுகாப்பு அலுவலகம் தீவைக்கப்பட்டது!

### தினேஷ் திடுக்கிடும் தகவல்

[கொழும்பு]

"ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை மாணவர் ஒருவர் துண்டுதுண்டாக வெட்டப்பட்டிருக்கிறார்! அம்மாணவனுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலகமும் தீயிடப்பட்டுள்ளது பெருமளவு வாள், கிறீஸ்போன்ற ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை"

இவ்வாறு மஹரகம எம். பி. திரு தினேஷ்குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்

அவசரகால நிலை நீடிப்பு மீதான விவாதத்தில் அவர் மேலும்கூறியதாவது: "இனப்பிரச்சினை தொடர்பாக தொண்டமானின் மாற்றுத்

(5 ம் பக்கம் பார்க்க)

## ரூ. 2 லட்சம் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

தனியார் வர்த்தகர் ஒருவரின் வாகனத்திலிருந்து ராக் அப்பணம் உட்பட 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

(8 ம் பக்கம் பார்க்க)

# தனியார் பஸ்ஸில் மீண்டும் கொள்ளை!

[மதவாச்சி]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பிரயாண பஸ் ஒன்று'ரம்பாவ' என்னுமிடத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு, பிரயாணிகளின் உடமைகள், பயங்கர ஆயுதங்கள் முனையில் சூறையாடப்பட்டுள்ளன,

இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்ட மதவாச்சிப் பொலிசார் சம்பந்தப்பட்ட சிலரைக் கைது செய்ததுடன் சூறையாடப்பட்ட ஒரு பகுதிப் பொருட்களையும் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊர்காவல் படையினர் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (மா)

# "உண்ணாவிரதம் நடக்கிறது இதனை மறுக்கமுடியாது!"

## சபையில் 'சரத்'

[கொழும்பு]

"இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தின் சார்பில் அரசியல்வாதி ஒருவரே கலந்து கொள்ளவேண்டும். இது ஒரு அரசியல் பிரச்சினையென்பதால் அரசியல்வாதி ஒருவர் கலந்துகொள்வதுதான் நல்லது" என்று கலவானை எம் பி திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

(5ம் பக்கம் பார்க்க)

## சிறையில் எவரும் உண்ணாவிரதம் இருக்கவில்லை

### லலித் கூறுகிறார்

[கொழும்பு]

"வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகள் எவரும் உண்ணாவிரதமிருக்கவில்லை. சிறைச்சாலை ஆணையாளரிடம் இதுபற்றி நான் இன்று விசாரித்தபோது இந்த விபரம் தெரியவந்தது. கைதிகளின் பெற்றோர் எதிர்வரும் திங்கட்கிழமை கைதிகளை வெலிக்கடையில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது' என்று பாதுகாப்பு அமைச்சர் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## தேவை

லைறடிங் பேர்க் சிலிண்டர் மெஷினில் வேலைசெய்யக் கூடியவர்களும். அச்சுக்கோப்பாளர்களும தேவை. ஐந்து வருடங்கள் அனுபவம் வேண்டும். மெஷின் வேலைசெய்பவர் அவர் வேலைகளில் நல்ல அனுபவமும் உள்ளவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கவும். விளம்பர. இல: 819 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 819

பாதுகாப்பு சேவை செய்வதற்கு அனுபவமும், நல்லொழுக்கம் உள்ளவர்களும் தேவை. சகல விபரங்களுடனும், நற்சான்றிதழ்களுடனும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 820 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 820

மரவேலை செய்யக்கூடிய இயந்திரமும், வெல்டிங் இயந்திரமும் தேவை. விலை, விபரங்களுடன் ஞா. குமநாதன், மாவிட்டபுரம், தெல்லிப்பழை விலாசத்துக்கு எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன். 809

## மணப்பந்தல்

யாழ் நகரில் சொந்த வீடும் சொந்தக் கடையில் சொந்த வியாபாரம் செய்யும் 29 வயதுள்ள வேளாளகுல மணமகனுக்கு அதேகுலத்தைச்சேர்ந்த மணமகள் தேவை. அல்லது 27 வயது படித்த பெண்ணிற்கு தகைமையுள்ள டாக்டர், இன்ஜினியர், கணக்காளருடன் மாற்றுச் சம்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படும். போதிய சீதனம் கொடுக்கப்படும் விளம்பர இல: 799 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 799

## விற்பனைக்கு

கொக்குவில் குளப்பிட்டி-ஆனைக்கோட்டை வீதியில் உயரப்புலம் பிள்ளையார் கோவிலுக்கு மிக அண்மையில் சகல வசதிகளுமுள்ள 3 பரப்பு காணி உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு:- அசோகா போட்டோ, இல: 225, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 816

## காணவில்லை

மாவெள்ளை நிறமுடைய பசு அடையாளம் M N 48 என்று பொறிக்கப்பட்டுள்ளது. கொம்பு இரண்டும் கூர் உடையது. கடந்த ஞாயிற்றுக் கிழமை காணமல்போய்விட்டது. கண்டவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரிவித்தால் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். மு நாக லெட்சுமி, 19, யாழ். வீதி, யாழ்ப்பாணம். 827

## பனம் விதை

விளையாட்டுக் கழகங்கள் 2000 பனம் விதைகள் தந்து பந்து ஒன்றைப்பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 830

## கண்டெடுக்கப்பட்டது

ஒரு குறிப்பிட்ட தொகை பணம் யாழ். கொழும்பு தனியார் பஸ் நிலையத்துக்கு முன்பாக கண்டு எடுக்கப்பட்டு R B பஸ் ஆசனம் பதிவுசெய்யும் இடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். நிர்வாகி, R B. புக்கிங் சென்றர், நவீன சந்தை யாழ்ப்பாணம். 829

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### சிசிலியா முத்தம்மா ஆசீர்வாதம்



தோற்றம்:
24-07-1914

மறைவு:
23-08-1985

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத் துயில்கொண்ட எம் அன்புத்
தெய்வமே உமது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

அன்னார் நோய்வசப்பட்டிருந்தபோது அவரை நன்கு பராமரித்துச் சிகிச்சையளித்த திருச்சிலுவை கன்னியர் வைத்தியசாலை டாக்டர், கன்னியர், தாதியர்க்கும், தமது செபங்கள், ஆராதனைகள் மூலம் ஆறுதலளித்த குருமாருக்கும், பலவழிகளில் தேவையான உதவிகள் புரிந்த உறவினர், நண்பர்களுக்கும், இறுதிச் சடங்கில்கலந்து சமுகந்தந்த ஏனையோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆசீர்வாதம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(797)

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி 3ம் கந்தாயம் —1985

1985ம் ஆண்டு 3ம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 30 9-85ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படுதல்வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின்படி வெளியாத்துப் பணம் அறவிடப்படும்.

வெற்றுக் காணிகள், குடியிருப்புக் காணிகள்—15%

இவையல்லாத காணிகள் —20%

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற்கட்டளைகள் ''யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல்வேண்டும். அப்படியாக அனுப்பப்படும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலியன விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சி. வீ. கே சிவஞானம்
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19-09-1985 822

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றத்தில்

கரம்பன், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கனகரத்தினம் கைம்பெண் சிவக்கொ என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

—மரணமெய்தியவர்

வழ. இல: ரீ. 102

கனகரத்தினம் சச்சிதானந்தன், தபாற்கந்தோருக்கருகாமை, கரம்பன் ஊர்காவற்றுறை

—மனுதாரர்

எதிர்

கனகரத்தினம் சதானந்தன், தபாற்கந்தோருக்கருகாமை, கரம்பன், ஊர்காவற்றுறை.

—எதிர்மனுதாரர்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்துக்களுக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் ஆற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 24ந் திகதி.

ஊர்காவற்றுறை
நீதிமன்றக் கட்டளைப்படி,
க. பொன்னம்பலம்,
பதிவ்பதிவாளர்.

வரைவு
ச. இளங்கோவன்,
மனுதாரரின் சட்டத்தரணி: 805

## உர வாரம்

(மாவிட்டபுரம்)

வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம் மாதம் 23 ம் திகதி முதல் 29ம் திகதி வரை தேசிய உரப்பாவனை வாரம் கொண்டாடப்படுகிறது.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் உரப்பாவனைப் பிரிவின் உத்தரவுக்கமைய கொண்டாடப்படும் இந்த உர வாரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும், அமோக விளைச்சலைப் பெறுவதிலும் உரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கவும், உரப்பாவனையை ஊக்குவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த உரப்பாவனை வாரம் தொடர்பான கருத்தரங்கு இம் மாதம் 24ம் திகதி தெல்லிப்பழை ப.நோ.கூ சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ்.இராஜரட்ணம் தலைமையில் இடம் பெறும் இக்கருத்தரங்கில் உரப்பாவனை குறித்து விரிவுரைகள் இடம்பெற உள்ளன.

## வட்டார பாடசாலை போட்டிகள்

(யாழ்ப்பாணம)

ஒவ்வோர் கல்விவட்டாரப் பாட சாலைகளும் இம்மாதம் 30ந் திகதிக்கு முன்னர் இசை, நடன, நாடகப்போட்டிகளை நடாத்தி முடித்து விடவேண்டும் என்று கல்விப்பணிப்பாளர் கல்வி வட்டார அதிகாரிகளைக் கேட்டுள்ளார்

வட்டார ரீதியிலான இப் போட்டிகள் முடிவடைந்ததும் மாவட்ட ரீதியில் இசை நடன நாடகப் போட்டிகள் நடத்தப் படும். (ஐ)

## இவரைக் காணவில்லை

(வவனியா)

கிளிநொச்சியைச் சேர்ந்த ஞானலிங்கம் பாஸ்கரன் என்பவர் வவனியா வந்த போது திடீரென காணமல் போய்விட்டார் என்று உறவினர்கள் வவனியாபிரஜைகள் குழுவிடம் புகார் தெரிவித்துள்ளனர்.


## RE- WINDING CHARGES

| | |
|---|---|
| TRIP SWITCH | Rs.. 100/- |
| TABLE FAN | Rs. 300/- |
| MOTOR ½ HP | Rs. 550/- |

## BLENDERS


| | |
|---|---|
| NATIONAL/ MOULANEX | Rs. 125 to Rs. 200- |
| KENWOOD/ SUMEETE | Rs. 200 to Rs. 350/- |
| BOOSTER TRANSFORMERS | Rs 65/- |
| T V. TRANSFORMERS | Rs, 150/- |
| DECK TRANSFORMERS | Rs 250/- |
| RADIO TRANSFORMERS | from Rs. 55/- |

எங்களால் செய்யப்படும் வேலைகட்கு 6 மாதம் உத்தரவாதம் அளிக்கப்படும்.

வயறிங்- பொயின்ற் ஒன்றுக்கு ரூபா 35/-

ஒமேகா மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஈழநாட்டிற்கு எதிரில்)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
நாகமுத்து
சுப்பிரமணியம்
சின்னத்தம்பி
(இளைப்பாறிய பொலிஸ்
உத்தியோகத்தரும்.
நாகர்கோவில் வடக்கு
முருகையா தேவஸ்தான
பரம்பரை தர்மகர்த்தாவும்)

மலர்வு:
27-1-1919

உதிர்வு:
23 8-1985

எங்கள் இல்லத்தில் அணையாத தீபமாக ஒளி வீசிய
அன்புத் தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட பாசப் பிணைப்பே!
உங்கள் பிரிவால் உளம் உருகும் அன்பு மனைவி
மனம் கலங்கி ஏங்கும் அருமைப் பிள்ளைகள்.
பேரப்பிள்ளைகள்

உமது பிரிவால் வாடும் உற்றார், உறவினர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், சரீர உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்துடன் அன்னாரின் 22 9-1985 ஞாயிற்றுக் கிழமை அன்று அந்தியேட்டி கிரியையிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இதையே அழைப்பிதழாக தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சாவித்திரி அம்மா (சரசு),
சின்னத்தம்பி விஜயநாதன் (பாபு)

பூசாரயர் ஒழுங்கை, பருத்தித்துறை. (676)

★ 200 கட்டிடங்கள் தரைமட்டம்!

★ வாயுக்குழாய்கள் வெடிப்பு!

# மெக்ஸிக்கோவில் பெரும்பூகம்பம்

# ஆயிரக்கணக்கானோர் பலி!

லண்டன், செப். 20

மெக்ஸிக்கோவில் நேற்றுக் காலை பெரும் பூகம்பம் வெடித்தது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். 200க்குமதிகமான உயர்ந்த கட்டிடங்கள் தரைமட்டமாயின. மெக்ஸிக்கோவின் தலைநகரான மெக்ஸிக்கோ சிட்டியில் நிலத்தடி வாயுக்குழாய்கள் வெடித்து மேலெழுந்துள்ளன. இதனால் பெரும் தீவிபத்தும் நச்சுவாயுக் கசிவும் ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஏழு மணியளவிலேயே இக் கோரப் பூகம்பம் ஏற்பட்டது. இது உலகின் மிகப் பயங்கரமான பூகம்பங்களில் ஒன்றாகும் என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் விபரித்துள்ளனர்.

மெக்ஸிக்கோவின் பசுபிக் கடற்கரைப்பகுதியைச் சேர்ந்த மேற்குப் பிரதேசத்திலேயே இப் பூகம்பம் வெடித்தது. இதன் அதிர்வு குவாட்டமாலா தேசத்தின் மேற்குப் பகுதி, அமெரிக்காவின் ஹூஸ்டன், டெக்ஸாஸ் ஆகிய நகரங்களையும் அதிரச்செய்ததென்று அறிவிக்கப்பட்டது.

இப் பூகம்பத்தில் உயிர் தப்பிய மெக்ஸிக்கோ வானொலி அறிவிப்பாளர் ஒருவர், "இப் பூகம்பத்தின் தாக்கம் மிக மிகக் கடுமையானதாகும். பல ஆயிரக்கணக்கானவர்கள் மடிந்துள்ளனர். இவர்களில் அநேகர் கட்டிடங்களின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கவேண்டும். எங்கும் ஒரே பாறைகள் உருண்டோடுவதையும் சரமாரியாக பெரும் பாறைகற்கள் வெடித்து சிதறுவதையும் காணமுடிந்தது" என்றார்.

அழிவுகளின் விபரங்களை தகுந்தவிதத்தில் பெறமுடியாதுள்ளது. ஏனெனில் சகல தொடர்பு வசதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. அம்புலன்ஸ், தீயணைப்பு இயந்திரங்கள் விரைந்து செயல்பட்டுக்கொண்டிருப்பதைக் காணமுடிந்தது.

மின்சார விநியோகம் நாடு முழுவதிலும் சீர்குலைந்துள்ளது. இதனால் மெக்ஸிக்கோ முழுவதும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச உதவி ஸ்தாபனங்கள் நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும்வகையில் மெக்ஸிக்கோ விரைந்தவண்ணமுள்ளன. மெக்ஸிக்கோ ஜனாதிபதி மிகேல் டிலா மாத்ரே தமது நாட்டை ஒரு இயற்கை அழிவுப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். (இ)

## உலகச் செய்திகள்

## மரம் நடுகை இயக்கம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் அடுத்தமாதம் மரம் நாட்டும் இயக்கம் ஒன்றை நடத்துவதற்கு சொலிபுரம் சமநலச்சேவை நிலையம் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், விசேடசேவை அலுவலர்கள், கிராமசேவை அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடாத்தப்படவிருக்கும் இம் மரம் நாட்டும் இயக்கத்திற்கான மரக்கன்றுகளை யாழ் மில்க்வைற் தொழிலக அதிபர் திரு. க. கனகராசா அன்பளிப்புசெய்ய முன்வந்துள்ளார்.

## தென்னாபிரிக்காவில் இரு வெள்ளையருக்கு மரணதண்டனை!

கேப்ரவுண், செப், 20,

ஒரு கறுப்பினப் பெண்ணைக் கற்பழித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இரு தென்னாபிரிக்க வெள்ளை இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க நீதிமன்றம் நேற்று அதன் விசாரணையின் முடிவில் இத் தீர்ப்பைவழங்கியது.

தனது காதலனுடன் காரில் சென்று கொண்டிருந்த அக்கறுப்பினப் பெண்ணை இந்த வெள்ளை இன வாலிபர்கள் ஒதுக்குபுறமான இடத்துக்கு கடத்திச் சென்றனர். பின்னர் அப்பெண்ணின் காதலனை முரட்டுத்தனமாகத் தாக்கிக் காருக்கு வெளியே வீசினர்.

தொடர்ந்து அப்பெண்ணைக்காரினுள் போட்டுக் கற்பழித்தபின்னர் அவரை அக்காரினுள்ளே வைத்துப் பூட்டி காருடன் சேர்த்து அவரைத் தீமூட்டிக் கொலை செய்துள்ளனர்.

இக் கொலைச்சம்பவம் அப்பெண்ணின் நகரத்தில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. மரண தண்டனைக்குக்குறைவான தண்டனை எதனையும் குற்றவாளிகளுக்கு விதிக்கக் கூடாதென கறுப்பின மக்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து நேற்றைய தீர்ப்பு அம்மக்களைப் பெரிதும் திருப்திப்படுத்தியதாகவும், இதன் மூலம் அந்நகரில் பெரும் கலவரம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

## பாலஸ்தீன அகதிமுகாமில் பிரதமர் தாட்சர்!

அம்மான், செப் 20,

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தாட்சர் ஜோர்தானிலுள்ள பாலஸ்தீன அகதிகள் முகாமொன்றைப் நேற்று பார்வையிட்டார்!

இம்முகாமில் 64 ஆயிரம் பாலஸ்தீன அகதிகள் இருக்கின்றனர். ஜோர்தானின் தலைநகரான அம்மானுக்கு வடக்கே இம் முகாம் அமைந்துள்ளது.

திருமதி தாட்சர் இம் முகாமிலுள்ள அகதிகளைப் பார்வையிட்டு அவர்களுடன் உரையாடினார் பின்னர் அவர்கள் மத்தியில் அவர் பேசுகையில், பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் மதிப்பதாகவும். பயங்கரவாதவழிகளில்லாமல் சமரசப்பேச்சுக்கள் மூலமாக பாலஸ்தீன பிரச்சனைகளை தீர்க்கவேண்டுமென்றார்.

தமது எகிப்து, ஜோர்தானிய விஜயத்தின் நோக்கம் மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதேயாகும்' என்றார்.

(இ)

போயிங் 'கனிஷ்க்கா'வின்———

# சிதைவுகளை மேலெடுக்கும்

# முயற்சிகள் ஆரம்பம்!

லண்டன் செப். 20

அயர்லாந்தின் 'கார்க்' துறைமுகத்துக்கு அருகே கடலில் வீழ்ந்த இந்திய போயிங் விமானத்தின் சிதைவுகளை மேலெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்திய போயிங் கனிஷ்க்காவின் முன்புறப்பகுதி(காக்பிட்) தண்ணீருக்குகீழாக சுமார் இரண்டாயிரம் அடி ஆழத்தில் கவிழ்ந்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதன் இறகுகள் மற்றும் உட்புறத்தின் பிரதான பகுதிகளும் முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தொலைவில் இருந்து கட்டுப்படுத்தப்படும் கேபிள்கள் மூலமாக இச்சிதைவுகள் மேலெடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது இதற்கென கனேடிய கப்பல் ஒன்று அமர்த்தப்பட்டுள்ளது.

சுமார் 350 பயணிகள் இவ் விமானத்தில் கொல்லப்பட்டனர். இவர்களில் அரைவாசிக்கும் குறைவானோரின் சடலங்களே மீட்கப்பட்டன. ஏனையோரின் சடலங்களில் எலும்புகளும் நீரின் அடியில் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

அவற்றை மேலெடுக்கும் பணிமுடிவடைந்ததும் இவ்விபத்துக்கான உண்மைக்காரணம் தெளிவாகத் தெரிந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது இவ்விபத்துக் குறித்த விசாரணைகள் எதுவித தகுந்த ஆதாரங்களும் இன்றி நடைபெற்றுவது குறிப்பிடத்தக்கது. (இ)

★ சமாதானக் கப்பல் தகர்ப்பு———

# நெருக்கடி நிலையில்

# பிரெஞ்சு அரசாங்கம்!

பாரிஸ், செப் 20

நியூஸிலாந்தில் 'கிறீன்பீஸ்' சமாதான இயக்கத்தின் 'றெயின்போ வேரியர்' என்ற கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவம் பிரான்ஸ் அரசியலில் பெரும் சூறாவளியைக் கிளப்பிவிட்டுள்ளது.

இக் கப்பல் தகர்ப்பு சம்பவத்தில் 'கிறீன்பீஸ்' இயக்க அங்கத்தவர் ஒருவரும் கொல்லப்பட்டார். நியூஸிலாந்துக்கு தெற்கிலுள்ள 'முறேரா' என்ற தீவில் பிரான்ஸின் அணு ஆயுதபரிசோதனைத்தளம் ஒன்று அமைந்துள்ளது.

இத் தளத்துக்கு சமீபமாக 'றெயின்போவேரியர்' கப்பல் அணு ஆயுத எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. இந் நடவடிக்கையை முறியடிக்கும் வகையிலேயே இக் கப்பல் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரான்ஸின் புலனாய்வுத்துறை ஸ்தாபனமே இத் தாக்குதலை நடத்தியதாக நியூஸிலாந்து குற்றஞ்சாட்டியது. ஆனால் பிரான்ஸ் அரசாங்கம் இதனை முழுமையாக மறுத்தது.

பிரெஞ்சு அதிபர் தமது பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை ஆதரங்காட்டி இக் குற்றச்சாட்டை மறுத்தார். ஆனால் தற்போது நிலைமை மாறியுள்ளது. பிரெஞ்சு நாட்டுப் பத்திரிகைகளும், நியூஸிலாந்து அரசாங்கமும் 'றெயின்போவேரியர்' தகர்த்தலுக்கு பிரெஞ்சு புலனாய்வு ஸ்தாபனமே பொறுப்பென்பதை தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கத்தொடங்கியுள்ளன.

இதனைத்தொடர்ந்து பிரெஞ்சு அதிபர் திரு மித்தரோன நேற்று தமது புலனாய்வுத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளை வேலைநீக்கம்செய்தார். 'கிறீன்போவேரியர்' விவகாரம்பற்றித் தமக்குப்போதுமான தகவல்கள் தரப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரெஞ்சுப் பாதுகாப்பு அமைச்சரையும் இது பற்றி விரிவாக ஆராய அவர் பணித்துள்ளார் தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து அவரும் பதவிநீக்கம் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது!

இதேவேளை இந்த சமாதானக்கப்பல் மூழ்கடிப்பு விவகாரம் பிரெஞ்சு அரசாங்கத்தை வெகுவாகப் பாதித்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

அவர்கள் இத்தவிவகாரத்தை பிரெஞ்சு அரசின் ஒரு வாட்டர் கேட் ஊழல்' என்று விபரித்துள்ளனர் மித்தரோனின் அரசாங்கம் இந்த விவகாரத்தில் வீழ்ச்சியடையும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ)

## பல்கலைக் கழக உண்ணாவிரதம் 9-ம் கட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் 8-ம் கட்ட உண்ணாவிரதத்தை அன்னையர் முன்னணிச் செயலாளர் திருமதி நிர்மலா பாலரட்ணம் நேற்று பாலபழம் வழங்கி முடித்து வைத்தார்

அதனைத் தொடர்ந்து 9-ம் கட்ட உண்ணாவிரதம் ஆரம்பமானது அதில் 20 பேர் பங்குபற்றினர். திருமதி நிர்மலா பாலரட்ணத்தின்சொற்பொழிவும், கலாசாரக் குழுவினரின் வில்லிசையும் நடைபெற்றன.

(ச)

### மணி வாக்கு

கடவுள் பூமியைப் படைத்தார்; வானத்தைப் படைத்தார்; கடலைப் படைத்தார்; ஆனால் அடிமையைமட்டும் படைக்கவில்லை.

—ஜோர்ஜ் வாஷிங்டன்

## நமது நோக்கு

# தென்பசுபிக் தொல்லைகள் பெருக்கப்பிடிக்குமா?

ஆண்டான் - அடிமை என்ற தொடர்பு தெய்வத்தைப் பொறுத்தவரையில் நிரந்தரமானது.

மனித சமுதாயத்தில் இது தலைகீழாக மாறுவதை நாம் நேரில் காண்கின்றோம்.

மாபெரும் ஏகாதிபத்தியமாக, பெருங்கடல் அனைத்துக்கும் எஜமாட்டியாக, அமெரிக்காவையே ஒருகாலம் ஆட்சிசெய்த பிரிட்டன் இன்று எந்த நிலையில் இருக்கின்றது?

திருமதி தாட்சர் ஜனாதிபதி றீகனுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்க இன்று தயங்கமாட்டார்.

அத்திலாந்திக், இந்து சமுத்திரங்கள் வல்லரசுகளின் ஆதிக்க பீடங்களாக அன்றுபோல் இன்றும் இருந்துவருகின்றன.

மாற்றம் என்பது பசுபிக் சமுத்திரத்தைப் பொறுத்தவரையிலேயே!

ஜப்பான் இரண்டாவது உலக யுத்தத்தில் ஆசியநாடு ஒன்று பசுபிக் (பகலைப் போன்றது) பிராந்தியத்தில் அரிய சாதனைகள் இயற்றி சற்றில் கடையைக் குளோஸ் பண்ணியது.

இன்று தென் பசுபிக் பிராந்தியத்தில் தொல்லைகள், பருப்போல தோன்றிப் பெருக்கும் சாத்தியம் கொண்டிருக்கின்றன.

பிரான்ஸின் சோஷலிஸ ஜனாதிபதி மித்திரான்ட் தம்முடைய நாடு அணு ஆயுதப் பரீட்சையைத் தொடர்ந்து நடத்தும் என்றும், அந்தப் பரீட்சைகள் வழக்கம்போல் பிரான்சுக்குரித்தான தென் பசுபிக் தீவுகளில் நடைபெறுமென்றும், பிரெஞ்சுப் பண்பாடு இப்பகுதியில் விரிவடையும் முயற்சி எடுக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் செய்தி நியூஸிலந்துக்குப் பேரிடியாகவிருக்கின்றது. தென் பசுபிக் நாடுகள் ஏழுடன் அணு ஆயுத ஒழிப்புப்பற்றி ஒப்பந்தம் செய்துகொண்ட நியூஸிலந்து இன்று அன்றுபோல் எந்த நாட்டுக்கும் பணிந்து நடக்கும் நாடல்ல.

அதன் பிரதமர் டேவிட் லாங் நியூஸிலந்து துறைமுகம் எதற்குள்ளும் அணு ஆயுதம் கொண்டுவரும் கப்பல் உள்ளிடப்படாதென்று கட்டளை வழங்கியிருக்கிறார். அவ்வாறு வந்த அமெரிக்கக் கப்பலைத் தடுத்து நிறுத்தி அமெரிக்காவின் ஆத்திரத்துக்கு ஆளாகியிருக்கிறார்.

இதேபோல் அவுஸ்திரேலியா இதுவரையும் பிரிட்டனுக்கும், இன்றுவரை அமெரிக்காவுக்கும் அடங்கி நடந்துவந்திருக்கிறது.

இன்று இவ்விரு நாடுகளும் அத்திலாந்திக் வழியாலும் இந்து சமுத்திர வழியாலும் மட்டும் ஆபத்தல்ல; பசுபிக் தாலும் இந்தப் போட்டிக்கிடமாகலாம் என்ற கருத்தில், மூன்று வழிகளிலும் மூக்கறுக்கப்படும் அபாயத்தை நீக்க அணு ஆயுத உற்பத்தி, பரீட்சை, கொண்டுசெல்லுதல் அனைத்தையும் தத்தம் இடங்களில் தடைசெய்ய முயல்கின்றனர்.

இதனை ஒரு பெருஞ் சவாலாக ஏற்றுக்கொள்ள நடந்த சம்பவம் அணு ஆயுத ஒழிப்பு என்ற 'கிறீன்பீஸ் (Green peace) இயக்கத்துடன் தொடர்புடையது.

இந்த இயக்கத்தினர் ஒரு பெரும் கப்பலை - Rainbow Warrior - 'றெயின் போ வாரியர்' என்ற பெயருடன் தயாரித்து தென்பசுபிக் நாடுகளுக்கு தங்கள் பிரசாரத்துக்குப் புறப்பட்டனர்.

கப்பல் நியுஸிலந்து துறைமுகத்தில் நின்ற போது எதிரிகளால் தாக்கப்பட்டுத் தாண்டது. அதில் இருந்த மாலுமி ஒருவரும் கொல்லப்பட்டார்.

இது பிரெஞ்சு அரசின் சதியெனக் கருதி, பிரெஞ்சுப் புலனாய்வு இயக்கத்தில் உள்ள சிலரே இதற்குப் பொறுப்பென்ற குற்றச்சாட்டில் வழக்கு நடைபெறுகிறது.

இதனைக் கேள்வியுற்ற பிரெஞ்சு ஜனாதிபதி ஆத்திரமுற்றவர்போல், உண்மை அறிந்து குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென உறுதிகூறினார்.

மதிப்பான ஓய்வுபெற்ற நீதியரசர் இந்த விசாரணையை நடத்தியபோதும், இச் சம்பவத்துக்கும் பிரெஞ்சு அரசுக்கும் எவ்வித தொடர்புமில்லையென அவர் அறிக்கை சமர்ப்பித்துவிட்டார்.

இதனை முற்றாக நிராகரித்த நியுஸிலந்து பிரதமர், ஐரோப்பிய மனித உரிமை மன்றத்துக்கு வழக்கை எடுத்துச்செல்ல 'கிறீன்பீஸ்' இயக்கத்துக்கு சிபார்சு செய்திருக்கிறார்

எதற்கும் அஞ்சாதவர் போல் ஜனாதிபதி மித்திரான்ட் அணு ஆயுதப் பரீட்சை தொடர்வதை தாமே நேரில் பார்க்க தென் பசுபிக் தீவுகளுக்கு விஜயம் செய்திருக்கிறார்.

இந்தப்பிரச்னையில் மோசமான கட்டம் என்ன? அவுஸ்திரேலிய பிரதமரையும் நியுஸிலண்ட் பிரதமரையும் பரீட்சையைப் பார்வையிடும்படி மித்திரான்ட் அழைத்திருக்கிறார். அபாயமில்லாத பரீட்சை என்பது கருத்து.

இதனை முற்றாக மறுத்த இரு பிரதமர்களும் பரீட்சையில் எவ்வித அபாயமும் இல்லையென்று சொன்னால் ஜனாதிபதி மித்திரான்ட் இதனை பாரிஸ் மாநகரில் நடத்தட்டும் என்று கேலி செய்திருக்கிறார்கள்.

இந்த எதிர்ப்புப் பெருக்கு மாசுல் பிரெஞ்சு ராணுவம் அதற்கு வகைசொல்லுமென்ற 'சோஷலிச' ஜனாதிபதியின் கூற்று. பண்டைக்கால நெப்போலியன் இக்கால டிஹால் போன்ற பிரெஞ்சு ராணுவ மேதைகளின் சர்வாதிகாரத்தை நினைக்கவைக்கிறது.

பொதுவாக மேல்நாடுகளும் குறிப்பாக இன்றைய அமெரிக்காவும் ஆசிய, ஆபிரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளைத் தலையெடுக்கவிடாவென்பதும் இன்றைய தென்பசுபிக் விவகாரங்கள் விளக்குகின்றன.

அடிமைத்தளையிலிருந்து மனிதன் விடுவிக்கப்பட வேண்டுமென்று குரலெழுப்பிய பிரெஞ்சு மேதாவிகள் இன்று தம் கல்லறைகளில் கலக்கமுறுவது திண்ணம்.

# சனி விரதமும் அதன் தத்துவமும்

**கனகசபாபதி நாகேஸ்வரன்**

8ல் சனி இராவணன் மாண்டான்!
2ல் சனி சுக்கிரன் குருடானான்!
ஜென்மத்தில் சனி சூர்ப்பனகை மூக்கறுபட்டாள்!
நளன், அரிச்சந்திரன் காடேகினர்!

விஷ்ணு சனிக்கு அதிபர். விஷ்ணு ஆலயங்களில் புரட்டாதிச் சனி சிறப்பாக அனுட்டிக்கப்படுவது சனி சிவபக்தருமாவார். யாழ்ப்பாணம்பெருமாள் கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில், வல்லிபுரக் கோயில் இன்னும் பல தலங்களில் சிறப்பாக புரட்டாதிச் சனிகொண்டாடப்படும். நவக்கிரக தேவர்கள் ஆலயங்களில் இருப்பதால் அங்கும் சென்று வழிபட்டால் சனி தோஷம் சாந்தியாகும்.

### ஜாதகத்தில் சனி

சனிக்கு இயற்கையாகச் சாந்தகுணம் தான் அமைந்தது. விசுவகர்மாவின் மகளை மணந்து அவளோடு வாழ்வின்பம் நுகராது அவருக்குச் சந்ததி தோன்றாது செய்த காரணத்தால் அந்தகற்பரசி "உமது பார்வை படுமிடமெல்லாம் கருகிப்போவதாக" என்று சபித்தார். சிவ பூசையின் பயனைக்கருதியாவது சாபநீக்கம் வேண்டுமென்று மன்றாடினார் சனிபகவான். "நீர் அமையும் தானத்தைப் பொறுத்து அதுகூடவும்குறையவும் கூடும்" என்று வாக்கருளினார் அந்த அம்மை. சனிபகவான் அமையும் இடத்தைப் பொறுத்து மனிதர்க்குப் பலன்கள் அமைகின்றன. பலனின் பலமும் சனி இருக்கும் ஸ்தானத்தைப் பொறுத்ததே!

"இலங்கை இராவணனுக் கெட்டிலே சனி
ராமனுலுயிர் மாண்டனன்
நாலிலந்தனில் சுக்கிரன் குருடனானதுஞ் சனிரெண்டிலே
பாவிசூர்ப்பனகை மூக்கறுந் [ததும்
பகருஞ்சனி ஜெனனமாம்"

என்றொரு பழைய பாடல் கூறுகின்றது.

"அகப்பட்டவனுக்கு அட்டமத்திற் சனி; ஓடிப் போனவனுக்கு ஒன்பதிற்குரு" என்றபடி இராவணன் போர்முனையில் தனது வீரமுங்களத்தே போட்டு ஒழியும் நிலைமையில் அட்டமச்சனி வந்ததையும்.

சனிபகவான் வானவீதியில் கிரகங்களுக்கெல்லாம் மேலே இருக்கிறார். 12 இராசிகளையும் ஒரு முறை வலம்வர 30 வருடங்கள் செல்லும். இதனாலேயே "முப்பது வருடம் வாழ்ந்தவனுமில்லை; முப்பது வருடம் கெட்டவனுமில்லை" என்னும் பழமொழியும் வழங்குகின்றது.

### சனிபார்வை தீமை

சனிபகவானுடைய தொடர்பினால் துன்புறுதவர்கள் இல்லையெனலாம். நளன், அரிச்சந்திரன் முதலான மன்னர்கள் நாடு நீங்கிக் காடடைந்து அனுவித்த இன்னல்களே சான்று.

"மஞ்சதவ முயோத்தியில்
வாழ் தசரதன்றன்
மக்களையும் வனவாச
மாக்கி வைத்தாய்
பஞ்சவர்கள் சூதினாற் பதி
பிழந்து
பஞ்சுபடும் பாடவர்கள்
படச் செய்வித்தாய்
எந்சனிலா வரிச்சந்திரன்
பெண்டை விற்றே
இழிகுலத்தி லடிமையுற
விசைய வைத்தாய்
தஞ்சமென்றே யுனைப்பணிந்
தேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பி
ரானே!"

இப்பாடல்களால் சனிபகவானின் தொழில்கள் நன்கு புலப்படுகின்றன.

(5-ம் பக்கம் பார்க்க)

### வண்ணை வெங்கடேஸ்வரனே!

**பல்லவி**

பாவலர் புகழும் கேசவனே - வைகுந்தனே
சீர்பூத்திகழும் வண்ணை வெங்கடேஸ்வரனே!
(பாவலர்)

**அனுபல்லவி**

தேவர்கள் பூஜிக்கும் தெய்வம் நீயே
ஆவலாய் உன்னடி அடைந்தேனே அருள்வாயே
(பாவலர்)

**சரணம்**

சங்கம் முழங்கும் வெற்றி சதுர்வண்ணைப் பதியில்
தங்கியுறைபவனே தாள் பிடித்தேன் ஐயா
அச்சுதனே! மாயவனே லஷ்மிநாராயணனே என்றும்
பொல்லாவினைகள் போயகன்று பொடிபடுமே
(பாவலர்)

– ச. கு. க. கௌரி

★ இன்று புரட்டாதி முதல் சனி விரதம்

### சனி வணக்கம்!

சனியனே என்று சொல்லிச்
சஞ்சலப் படுவர் மாந்தர்
தனியனாய் நின்று தேவர்
தன்னையே ஆட்டி வைத்தீர்
முனிவர்கள் மூன்று மூர்த்தி
முக்கோடி கணங்கள் மேலும்
சனியனே உமது பார்வை
சற்றேனும் தப்ப வில்லை;

பரம்பொருள் சிவனார் அன்று
பத்தினி உமையை நீங்கி
பிரம்படி படவே வைத்தாய்
பித்தனாய் ஏச வைத்தாய்
கரந்தனில் சூலம் ஏந்திக்
கானகத் தாட வைத்தாய்
நிரந்தர மாக என்மேல்
நீதயைக் காட்டு வாயே;

மாவினை உரலில் கட்டி
மத்தினால் அடிக்க வைத்தாய்
பாவினைத் திருடி உண்டே
பாம்பினில் உறைய வைத்தாய்
வேலினைக் கையிற் கொண்டு
வேலவன் ஆண்டி யானான்
கேலிகள் இல்லை ஐயா!
கேட்டினை நீக்கு வாயே.

சூதினில் நாடு மக்கள்
சுகத்தினைத் துறந்து வேறோர்
வேதியர் போல வைத்தாய்
வேங்கைகள் ஐவரைத் தான்
பாதியில் பேச்சை விட்டுப்
பாரதப் போரை வைத்தாய்
தீவிர வாழ்வு பெற்று
திடமுடன் வாழ வைப்பாய்;

உள்ளத்தி னடியில் நின்று
ஊற்றெடுத் தோடும் பாக்கள்
அள்ளியே பருகு; எங்கள்
அருந்தமிழ் மண்ணில் என்றும்
துள்ளியே திரிந்து நாங்கள்
சுதந்திர மாக வாழ
வள்ளலே! சனிய னாரே!
வழியொன்று தாரீ ரய்யா.

— எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி.
திகதி: 5 (21-9-85)
கிழமை: சனி
திதி: ஸப்தமி
நக்ஷத்திரம்: கேட்டை

மேடம்; கடந்தகால நினைவுகள் உங்களுக்கு கவலையைத் தரலாம் பிறர்மீது நம்பிக்கை வைப்பதை தவிர்த்துக்கொள்ளவும்- பொருட்செலவுமுண்டு. அடக்கம் விரும்பத்தக்கது.

இடபம்; உள்ளத்தில் உவகைக்கூத்து உறவினர்கள் வருகை. வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். சிலருக்கு மணவாழ்வுக்கு அத்திவாரமிடப்படலாம்.

மிதுனம்: வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் வாகனம் செலுத்துவோர் கவனமாயிருக்கவேண்டும். எவ்விடயத்திலும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

கடகம்: தெய்வ சிந்தை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம், பொதுப் பணிகளை மனம்நாடும், தந்தை வழி வரவுக்குமிடமுண்டு.

சிங்கம்: தொழில் நிலை மாற்றத்திற்குமிடமுண்டு. வாழ்க்கையும் உற்சாகம் நிரம்பியதாகவேயிருக்கும். மனதில் புதிய ஆர்வங்களும் எண்ணங்களும் தலைதூக்கும்.

கன்னி: அமைதியான வாழ்வுடன் தெய்வத்தின் அருளும் கிட்டும் புதிய நண்பர்களும் வந்துசேருவார்கள். காதலர்கட்டுகளுக்கு இன்று கவர்ச்சிகரமான தினம்.

துலாம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும்; ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிப்பர். கடன், தொல்லைகளும் அதிகரிக்கலாம்.

விருச்சிகம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும்! விந்தையான போக்கு வேடிக்கை காட்டும். கவனம் நன்று.

தனுசு: பிரிந்த குடும்பம் மீண்டும் இணையும். அறவழியில் நாட்டம் பிறக்கும். குடும்பத்திலும் சுமுகநிலை தோன்றலாம். இன்று புகழ்வந்து சேரலாம்.

மகரம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும்; கண்துடைப்பு வேலைகள் நடக்கும் கவனம் செலுத்தவும். பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பொறுமையைப் பேணவும்.

கும்பம்: அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். பூமியால் லாபம் இடைக்கும். தாய் வழியாலும் ஆதரவு கிடைக்கும். முன்னேற்றமான நாள்.

மீனம்: எதிர்பார்த்த வரவுக்கு இடமுண்டு. புத்திர பெருமையுண்டு. உறவுமுறைகள் பலப்படும். மகிழ்ச்சிகரமான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்


உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
THE LAST HUNTER
முழுக்க முழுக்க விறுவிறுப்பான தாக்குதல்- இதுவரை வெளிவந்த படங்களில் மிகச்சிறந்த படம். தவறவிடாதீர்கள்.

லிபேர்ட்டி மினி
10-30, 2-30,
4-45, 7-00
RED SUN
சிறந்த சண்டைப்படம்

ஸ்ரான்லி மினி
5' 'Eco' திரைவரிசை
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Sophia Laurance in
Sun Flower
(Love story)
இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது தனது காதலியைப் பிரிந்து போருக்குச் செல்லும் ஒரு வீரனின் காதல் காவியம்.

ராஜா மினி
தினசரி 10-30, 2-30, 6-30
புத்தம் புதிய வெளியீடு
சுரேஷ், ராதாரவி
சங்கிலிமுருகன்
கவுண்டமணி,
கல்லாபட்டி சிங்காரம்
ஹலோ ஆர்
பேசுகிறது
[ஈஸ்ட்மன் கலர்]

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
GAME OF DEATH
FIST OF FURY
ENTER THE DRAGON
BIG BOSS
ஆகிய படங்களின் சண்டைக் காட்சிகள் தொகுக்கப்பட்டது. புரூஸ்லியின் அதிசிறந்த கராட்டிச் சண்டைகளை இரு மணித்தியாலங்கள் பார்த்து மகிழுங்கள்:

வெலிங்டன்
10-30, 2-30, 6-30,
பாக்கியராஜ்-அம்பிகா
நடித்த
அந்த ஏழு நாட்கள்

விஜேய சினிமா
10-30, 2-30, 6-30
2-வது வாரமாக
ஓடுகிறது!
இளையராஜன்,
இளச்சந்திரன்,
ஸ்ரீவித்யா ஜெயராம்,
இலக்குமிதா, ஜெய்சங்கர்
நடித்த
ராஜு மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்


## வெலிக்கடை சிறையிலிருக்கும்
# இளைஞர்களின்
## பெற்றோருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையிலிருக்கும் இளைஞர்களின் பெற்றோருக்கு யாழ்; பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்த வேண்டுகோள்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களைப் பார்வையிடச் செல்லும் குழுவிடம் கடிதம் கொடுத்து அனுப்ப விரும்பும் பெற்றோர் இன்று சனிக்கிழமை மாலை ஆறு மணிக்குமுன்னர் யாழ். பல்கலைக்கழக மாணவ பிரதிநிதியிடம் நேரடியாக கடிதங்களைக் கையளிக்குமாறு வெலிக்கடைச் சிறையிலிருக்கும் இளைஞர்களின் பெற்றோருக்கு யாழ்; பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கடத்தப்பட்ட கார்
## விபத்துக்குள்ளானது!

(வண்ணார்பண்ணை)

டாக்டர் ஒருவருக்குச் சொந்தமான கடத்தப்பட்ட மோட்டார் கார் ஒன்று லொறி ஒன்றினுல் மோதுண்ட நிலையில் யாழ். கச்சேரி பஸ் நிலையத்தில் காணப்பட்டது.

இக்காரைக் கடத்தியவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் வாலிபர் ஒருவர் நேற்று நண்பகல் இளைஞர் கோஷ்டி ஒன்றினுல் கூட்டிச்செல்லப்பட்டார்.

மேற்படி மோட்டார் காரில் இருந்த தாலே ஜாக்கையும் அந்த இளைஞர் கோஷ்டி எடுத்துச் சென்றது.

பச்சை நிறமுடைய இக்கார் கடத்திவரப்பட்டபோது லொறி ஒன்றினுல் மோதப்பட்டு பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கார் பெண்டாக்டர் ஒருவருக்கு சொந்தமானதெனவும் இயக்கத்தின் பெயர் சொல்லிக் கடத்தப்பட்டதாகவும் அங்கு பேசப்பட்டது. சைக்கிளில் வந்த ஒரு இயக்கக் கோஷ்டியினர் சம்பந்தப்பட்டவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

# மருந்து கலவையாளருக்கு
# சான்றிதழ் வழங்கவேண்டும்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் 14வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது புதிதாக சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மருந்துக் கலவையாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு தேர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிளைத் தலைவர் திரு சி. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அண்மையில் தமிழ்ப் பகுதிகளில் இடம் பெற்ற வன்செயல்களினுல் உயிரிழந்த தமிழ் மக்களின் ஆத்ம சாந்திக்காக இரண்டுநிமிட மௌனஅஞ்சலியும் செலுத்தப் பட்டது.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் பின்வருமாறு: தலைவர் சி. திருநாவுக்கரசு (குருநகர் அரசினர் வைத்தியசாலை) உப தலைவர் ரி. தனபாலன் (புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை), செயலாளர் எம். கந்தசாமி (பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை) உப செயலாளர் எஸ். இருபானந்தன் உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலை), பொருளாளர் சி கந்தசாமி (மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை)

செயற்குழு உறுப்பினர்களாக ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

# இ ஆ. காங்கிரஸ்
# யாழ். கிளை
# அலுவலகம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஆசிரியர் காங்கிரஸின் கிளை அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள பட்டப் படிப்புகள் கல்லூரிக் கட்டிடத்தில் இன்று சனிக்கிழமை நண்பகல் திறந்துவைக்கப் படவுள்ளது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸின்யாழ் குடாநாட்டிலுள்ள அங்கத்தவர்களின் நலன் கருதி இவ்வலுவலகம் அமைக்கப்படுவதாக அதன் பொதுச்செயலாளர் திரு க சிவஞானம் தெரிவித்துள்ளார். [மா]

# சிறுகதைப்
# போட்டி
# முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நீர்ப்பாசன திணைக்களத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகம், அகில இலங்கைரீதியாக 1985ம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டிகளில் முதலாவது பரிசை 'பச்சைவயல் கனவுகள்' சிறுகதைக்காக, பரந்தன் செல்வி சிவாஜினி சுப்பிரமணியமும், இரண்டாம் பரிசை 'பட்டங்கள் மீண்டும்பறக்கும்' சிறுகதைக்காக தெல்லிப்பழை, திருமதி கோகிலா மகேந்திரனும், மூன்றாம் பரிசை 'அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள்' சிறுகதைக்காக. பசுவை திரு எம். நவரட்ணமும்பெறுகிறார்கள்

பாராட்டைப் பெறும் சிறுகதைகளாக 'உயிரடங்குச் சட்டம்' என்ற வந்தவை திரு. ந. ஜெயராசாவின் சிறுகதையும். 'புதிய சிற்பிகள்' என்ற அக்கராயன்குளம் திரு. பெருகணேசனின் சிறுகதையும் தெரிவாகியுள்ளன.

# விமானப்படை
# அபிவிருத்திக்கு
# 23 கோடி ரூபா

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் அபிவிருத்திக்கு 23 கோடி 83 லட்சம் ரூபா மேலும் செலவு செய்யப்படவுள்ளது. இதற்கான உபமானியக் கோரிக்கையை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

# பாரதி ச.ச.நி.
# நிர்வாகிகள்

(தெல்லிப்பழை)

கட்டுவன் தெற்கு - மேற்கு ஏழாலை வடக்கு பாரதி சனசமூக நிலையத்தின் புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் சி குமாரசாமி. உப தலைவர் ந. கிருஷ்ணமூர்த்தி. செயலாளர் மா. ஜெகசீலன், உப செயலாளர் திருமதி ந. பத்மநாதன், பொருளாளர் சி, சந்திரசேகரம், உப பொருளாளர் கு. குகதாசன், போஷகர் மூ . தருமமூர்த்தி. 7 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (மா)

## மாஸ்கோ
# பயணமானர்



(யாழ்ப்பாணம்)

நயினாதீவைச் சேர்ந்த வீர தர்மகுலசிங்கம் சோவியத் யூனியனிலுள்ள பற்றிஸ் லுமும்பா நட்புறவு பல்கலைக்கழக புலமைப்பரிசில்பெற்று மொஸ்கோவிற்கு பயணமானர். இவர் நயினாதீவு வீரவாகு தம்பதிகளின் மூத்த புதல்வராவார். நயினை ஸ்ரீ கணேசவித்தியாசாலை நயினை மகாவித்தியாலயம் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவராவர்.

மருத்துவக்கல்விக்கு தெரிவு செய்யப்பட்ட இவர் ஒரு பிரபல இளம் கவிஞர் இலங்கையிலுள்ள பெரும்பாலான பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும் இவருடைய கவிதைகள் பிரசுரமாகியுள்ளன அந்தமனத்துடன் ஒருவாதம் என்ற கவிதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை வடபகுதியில் ஸ்தாபித்த முக்கியஸ்தர்களில் ஒருவரும் பிரபல புத்தகசாலை உரிமையாளருமான காலம்சென்ற ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களின் மருமகனுவார்.

# அகதிகளுக்கு
# கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

திருகோணமலை பகுதியிலிருந்து வன்செயல்கள் காரணமாக வெளியேறி சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது தங்கியிருக்கும் அகதிகள், அரசாங்கம் வழங்கும் இலவச உணவுப் பொருட்களைப்பெறுவதற்கு தமது அலுவலகத்தில் உடனடியாகத் தங்கள் பெயர்களைப்பதிவு செய்யுமாறு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் இவர்கள் முறைப்பாடு ஒன்றை செய்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விண்ணப்பங்கள்
# கோரப் படுகின்றன

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சு குடும்ப சுகாதாரப் பிரிவின், கணனிப் பிரிவுக்குத்திட்ட நடைமுறை ஆராய்ச்சியாளர் (தரம் III) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தில் கணிதம் கணக்கீடு பௌதிகம். கணனி விஞ்ஞானம், பொருளாதாரம் ஆகிய ஒரு பட்டத்துடன் பட்டம் பெற்றவராகவும், இரண்டு வருடங்கள் கணனித் திட்டமிடலில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல்வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை அறிய 13- 09 - 85 வர்த்தமானியைப் பார்க்கலாம்.

# உள்ளூர் உற்பத்திகளுக்கு மக்கள் பெரும் ஆதரவு

(கொழும்புத்துறை)

"சமீப காலமாக மக்கள் உள்ளூர் உற்பத்திகளிலேயே அதிக ஆர்வம் காட்டி வருவது மகிழ்ச்சியை அளிக்கின்றது. இதன் மூலம் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதுடன் உற்பத்தியாளர்களும் ஊக்குவிக்கப்படுகின்றனர். உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலமே பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்த முடியும்"

இவ்வாறு மாவிட்டபுரத்தில் 20 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள குஷியா பழரசத் தொழிற்சாலைத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் பனம் பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. க. நடராசா தெரிவித்தார்.

தொழிற்சாலை முகாமையாளர் திரு. மனோகரன் தலைமையில் இத் திறப்பு விழா நடைபெற்றது. பனம் பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில் "நல்லூர் உற்சவகாலங்களில் உள்ளூர் உற்பத்திகளே கூடுதலான அளவு மக்களால் விரும்பி வாங்கப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும்" என்றார்.

மின்சார சபை அதிபர் இலங்கேஸ்வரன் வள்ளல் திரு. க. கனகராஜா உட்பட வேறுபலரும் பேசினர்.

## யாழ்—வவனியா

# கல்வி மாவட்டங்களில் அக். 7ல் விஞ்ஞான தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவனியா கல்வி மாவட்டங்களில் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் வழக்கம்போல இவ்வருடமும் விஞ்ஞானதினம் நடக்கவிருக்கிறது.

யாழ் மாவட்டத்திற்கான விஞ்ஞான தினம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும், வவனியா மாவட்டத்திற்கான விஞ்ஞானதினம், வவனியா மகாவித்தியாலயத்திலும் அடுத்தமாதம் 7ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இத்தினத்தில் மாணவர்களுக்கான விஞ்ஞானப் பேச்சுப் போட்டியும் விஞ்ஞான நேரடி வினாப் போட்டியும் நடைபெறும்.

விஞ்ஞானப்பேச்சுப்போட்டியில், அம் மாவட்டத்திலுள்ள கல்லூரிக்கு ஒருவர் வீதமும், நேரடி வினாப்போட்டியில் அம் மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரிக்கு 5 பேர் வீதமும் பங்குபற்றுவர்.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர் அடுத்தமாதம் 1ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை விஞ்ஞானமுன்னேற்ற சங்கத்தின் விஞ்ஞான விருத்திக்குழு இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளது. (•)

# பேச்சுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராமகிருஷ்ணஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீ இராமகிருஷ்ணசேவாசிரமம் கடந்த 15ல் நடத்திய பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர்கள்:-

கீழ்ப்பிரிவு ஆண்கள், 1-ம் இடம் சி. சிவஜெயந்தன் 2-ம் இடம் ஐ ஜெயந் 3-ம் இடம் ஜெ. செந்தில்குமார்.

கீழ்ப்பிரிவு பெண்கள்:- 1-ம் இடம் வி றஜனி 2-ம் இடம் சி. ஜெகானி 3-ம் கு. யாழினி, வி. ஆனந்தவல்லி.

மத்தியபிரிவு ஆண்கள்:- 1-ம் இடம் பா. வேதீஸ்வர ரூபன் 2-ம் இடம் சி. துஷாந்தன் 3-ம் இடம் ந குலேந்திரன்.

மத்திய பிரிவு பெண்கள்:- 1-ம் இடம் வி. மாலினி 2-ம் சு. தர்மினி 3-ம் இடம் க. யாமினி.

மேற்பிரிவு ஆண்கள்:- 1-ம் இடம் சி. நந்தகுமார் 2-ம் இடம் பா. சணிருஞ்சித் 3-ம் இடம் சோ அகிலன்

மேற்பிரிவு பெண்கள்:- 1-ம் இடம் ப. ஜெயந்தி 2-ம்இடம் ந தமிழரசி 3-ம் இடம் கு. மாலினி.

அதிமேற் பிரிவு பெண்கள் 1-ம் இடம் கு. பவானி.

## நியமனம

(யாழ்ப்பாணம்)

மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபராக திரு எஸ். சுந்தரம் இம்மாதம் முதல் நியமிக்கப் பட்டுள்ளார்

இவர் முன்னர் துணுக்காய் உ. அ. அதிபர் அலுவலகத்தில் பிரதமலிகிதராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# [11]

# 'அந்தத்' தமிழகம் நோக்கி .....

— தி. பொன்னம்பலவாணர்

முருகனடியார்கள் அலைவருக்கும் பழனி பெருமையளிக்கும் தலமாகும். இத் தலம் தமிழ் மக்களுக்கு மிக அபிமானத்திற்குரியது என்பதைப் பழனித் தலம் தொடர்பான திருப்புகழ் முதலிய அருட்பாடல்கள் மட்டுமின்றி நவீன பக்திப் பாடல்களும் இசைக்கின்றன

மதுரையிலிருந்தோ திருச்சியிலிருந்தோ பழனிக்குச் செல்வதானால் பஸ் கட்டணம் சுமார் 10 ரூபாவாகும்.

முடியை (தலைமயிர்) காணிக்கையாகச் செலுத்தப்படும் பிரார்த்தனைத் தலங்கள் பலவற்றுள் பழனியும் ஒன்றாகும்

முடி காணிக்கையாகச் செலுத்தப்படும் தலங்களுள் பழனிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. திருப்பதி, சமயபுரம் முதலிய தலங்களிலோ நேர்த்திக் கடன் நிறைவேற்றிய அடியவர்களே மொட்டையுடன் காட்சியளிப்பர். பழனியிலோ ஏறிப் பறந்துசென்று மலைமீது அமர்ந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றது. அருமையான இந்த ஒலிய வரலாற்றின் பிரகாரம் திருவாவினன்குடியும் பழனியும் ஒரேதலமாகக் கருதப்படுகின்றது. திருமுருகாற்றுப் படையிலுள்ள ஆவினன் குடிக்குரிய பகுதி பழனிக்கும் உரிமையுடையதாகக் கருதப்படுவதோடு பழனித்திருப்புகழைத் திரட்டி முற்பட்டவர்கள் திருவாவினன்குடி ஆலயத்திற்கும் பழனி ஆலயத்திற்கும் உள்ள பாடல்களை ஒன்றாகவே பதித்து இவ்வுண்மையை வலியுறுத்தியுள்ளார்கள்.

மலையேறிப் பழக்கமில்லாதவர்களுக்குப் பழனிமலை ஏறினர், சிரமப்பட்டு ஏறினாலும் படிகளில் ஏறி முருகனைத் தரிசிக்கும் சந்தோஷம் ரயில் ஏறிச் செல்வதில் ஏற்படவில்லை!

படிகளில் ஏறிச் செல்வோர் வழியில் பல பிச்சைக்காரர்களையும் தாண்டியே மலையேற வேண்டும்.

பழனி மலையை வலம்வருவதனால் சுமார் ஒன்றரை மைல் நடக்கவேண்டும். ஒன்றரை மைல் நடப்பதா? என அஞ்சத்தேவையில்லை அரைமைல் நடந்ததுபோன்ற சிரமமும் தோன்றாது.

(தொடரும்)

# வயது வேறுபாடின்றி இருபாலாரும் முடியிறக்கிக் காணிக்கை செலுத்தும் 'பழனிமலை'!

முருகப் பெருமானே மொட்டைத் தலையுடன் ஞானதண்டாயுதபாணியாகக் காட்சியளிக்கிறார்.

நேர்த்திக்கடன் வைத்தவர்கள் பெண்களாயினும் ஆண்களாயினும் பழனித்தலத்தை அடைந்ததும் தமது தலை மொட்டையாவதை யிட்டுச் சிறிதும் கூச்சப்படமாட்டார்கள். இங்கு நேர்த்திக்கடனை நிறைவேற்றிய தலையுடன் பலதரப்பட்டவர்களும் காணப்படுவது ஒருசாதாரண காட்சியாகும்.

பழனிக் கிராமமும் - கோயிலும் தினமும் புதிய யாத்திரிகர்களின் வரவினால் கலகலப்பாகவே இருக்கும். காவடி எடுக்கும் அடியார்கள் பலர் மலையடிவாரத்திலிருந்து சிறு தூரத்தில் விளங்கும் திருவாவினன்குடி ஆலயத்திலிருந்தும் காவடி எடுக்கின்றனர் ஆனால் பழனி மலையில் உள்ள நெருக்கடியின்றி அமைதியான தலமாகவே திருவாவினன்குடி விளங்குகின்றது திருவாவினன்குடியிலுள்ள ஓவியம் ஒன்றில் திருவாவினன்குடியிலிருந்த முருகப்பெருமானை மயில்மீது வது அரிய சாதனையாகவே இருக்கும். அரைவாசி உயரம் ஏறியபின் பல இடங்களிலும் இருந்து ஆறி, ஆறி ஓய்வெடுத்து ஏறுபவர் பலரைக் காணலாம்.

பழனியாண்டவர் கோவிலுக்குப் பின்புறமாகச் சுமார் 1500 பேர் உட்காரக்கூடிய மண்டபத்தில் பல அடியார்கள் உணவருந்திக் கொண்டிருந்தார்கள் சுமார் ஐநூறு பேரே உணவருந்திக் கொண்டிருந்த போதும் கால்வைக்கவோ இருந்து ஆறவோ இடமில்லாதபடி எங்கும் சோற்றுப் பருக்கைகள் சிந்துண்டு கிடந்தன பலர் சுவாமி தரிசனம் செய்தபின் சாப்பிடுவதற்காகக் கைகளிலே புளிச்சாதம், தயிர்ச்சாதம் என பலவற்றை எடுத்துவந்திருந்தனர்.

குழந்தைகள், பெண்கள், வயோதிபர் போன்றோர் மலையேற இலலாத நிலையில் முருகனைத் தரிசிக்கச் செல்ல மலையடிவாரத்திலிருந்து மலையுச்சக்கு ரயில் சேவையுண்டு. பழனி தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் இந்த ரயில் மூலமாகவும் பலர் மலைக்குச் செல்கின்ற

# அமைதி வேண்டி கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் பிரதி வெள்ளி தோறும் மாலையில் தமிழ் மக்கள் அமைதவேண்டி அவ்வூர்ப் பொதுமக்களால் பஜனை கூட்டுப் பிராத்தனை நடைபெற்றுவருகிறது. (ச)

# புலோலியிலும் கொடும்பாவி எரிப்பு:

(புலோலி)

புலோலியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரு இடங்களிலுள்ள சந்திகளில் பொதுமக்கள் ஊர்வலமாகக் கொண்டு வந்த கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

புலோலி உபய கதிர்காம அருகாமையிலும் புலோலி கிழக்கு வயிரவர் ஆலய அருகாமையிலும் இருந்து இக் கொடும்பாவிகள் ஊர்வலம் புறப்பட்டது. கொடும்பாவிக்கு முன்னால் ஒருவர் கொள்ளிக்குடம் கொண்டு செல்ல பல ஆண்களும் பெண்களும் ஒப்பாரி வைத்துச் செல்ல மேளங்கள் அடிக்கப்பட்டு கொடும்பாவி இழுத்துச் செல்லப்பட்டு புலோலிச் சந்தியில் வைத்து எரிக்கப்பட்டது. புலோலி கிழக்கு வயிரவர் ஆலய அருகாமையிலிருந்து இழுக்கப்பட்ட கொடும்பாவி மந்திகை கிராம நீதிமன்றச் சந்தியில் வைத்து எரிக்கப்பட்டது.

பவர்ஸ் உரம்
அதிக விளைச்சலுக்கும்
கூடிய இலாபத்துக்கும்
ரூபா 2,000/- க்கும் மேல்
ABC
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.
MASTERS ABC 6/85 (a)

# 40 நாட்களில் 33 கொள்ளை
# விடுதலை இயக்கங்களுக்கு 'தமிழீழ மக்கள்' கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்த 40 தினங்களில் சுமார் 33 கொள்ளை, கடத்தல் சம்பவங்கள் நடந்துள்ளதாக நேற்று வெளியான துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்கள் வெளியிட்டுள்ள இத் துண்டுப் பிரசுரத்தில், ஆகஸ்ட் 1 ம் திகதி முதல் செப்டம்பர் 6 ம் திகதி வரை நடந்த கொள்ளை, கடத்தல் சம்பவங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது "விடுதலை இயக்கங்களே எங்கள் இனத்தவர்களினாலேயே நாங்கள் படும் இன்னல்கள் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? எங்கள் குமுறல்கள் உங்கள் காதுகளுக்கு கேட்கவில்லையா?

"இன்று சங்கிலித்தொடர் போல் நிகழும் கொள்ளைகளின் காரண கர்த்தாக்களை கண்டு பிடித்து தண்டனை கொடுக்க ஏன் உங்களால் முடியவில்லை? அவர்களை கண்டு பிடிக்க முடியவில்லையா, அல்லது கண்டும் காணாமல் இருக்கின்றீர்களா? இன்று தனியார் உடமைகளைக் கொள்ளையடித்து கொடுமை செய்கின்ற குழுக்களை நிச்சயமாக விடுதலை ஸ்தாபனங்கள் என்று நாம் கருதவில்லை."

## உண்ணாவிரதம்

(கைதடி)

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மாணவர்களும், கைதடி வாழ் பொது மக்களும் இணைந்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர். பல்கலைக்கழக மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.


# லீடா
முழு ஆடை நிறைந்த பால்

★ உடனே கறந்த பசுப்பாலின் ருசி!

★ பால் வெண்ணெய் கூடுதலாக உள்ளது!

★ இணையற்ற சக்திமிக்க பால்!

● உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட ஒல்லாந்திலிருந்து "லீடா" கிடைக்கின்றது.
● பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை, கைபடாதது, அசலானது என உத்தரவாதமளிக்கப்படுகின்றது.
● டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே கிடைக்கின்றன





## ரூ. 50 லட்சம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள விடியோ நிலையமொன்றின் நிர்வாகியான செ. இராமநாதன் என்பவர் கடத்திச் செல்லப்பட்டு 50 லட்சம் ரூபா பணம் கேட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், நிபந்தனை எதுவுமின்றி அவரை விடுதலை செய்யும்படியும்கோரி யாழ். வர்த்தக சங்கச்செயலாளர் திரு. சி. நமசிவாயம் துண்டுப் பிரசுர மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட இராமநாதன் என்பவரை நிபந்தனை எதுவுமின்றி விடுவிக்குமாறு அவரது மனைவியும் பிள்ளைகளும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். (மா)

## சங்கத் தலைவர் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ. தர்மகுலசிங்கம் (36 வயது) என்பவர் விபத்தில் சிக்கி மரணமானார். நேற்றுக்காலை இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

யாழ். கொட்டடியைச் சேர்ந்த இவர் தென்னை மரத்தில் சீவல் தொழிலில் ஈடுபட்டிருந்த பொழுது கைதவறிக் கீழே விழுந்து மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி சாம்பியனானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியின் மூன்று பிரிவுகளிலும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முதலிடத்தைப்பெற்று சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

கடந்த 16ம், 17ம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிகளில் மொத்தம் 26 பாடசாலைகள் கலந்துகொண்டன.

15வயதுப்பிரிவில் வட இந்து மகளிர் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடமும், 19வயதுப் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியும் இரண்டாம் இடத்தைப்பெற்றன.

## சனிவிரதமும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

### தூஷணைப்பற்றுளன்

சனிபகவானை மதாடர்புள்ளவர்களது வாக்கில் அமங்கலச் சொற்களே அதிகம்வரும். மங்கல வார்த்தை வருவது அரிதினுமரிது.

சனிபீடைக்குப் பரிகாரமாகச் செப்பப்படுவன "சனி நீராடு" என்பதன்படி சனி வாரத்தில் எண்ணெய் தேய்த்து நீராடுவோருக்கு ஆயுள், ஆரோக்கியம் என்பன உண்டாம்.

### பயனை வெல்லும் சனி

எள்கலந்த உணவை உட்கொள்ளல்நலம். எள் விதைத்தாலே செல்வம் பெருகும் பிறருக்கு எள்நானம் புரிதல்நன்று சனிவாரங்களில் காலையிற் கருடதரிசனம் ஆஞ்சநேயர் தரிசனம் செய்தல்நன்று இந் நாளிற்கடன்வாங்குதல், சந்தையுடுத்தல்கூடாது. காகத்திற்கு உணவிடும்போது எள்ளும் வெல்லமுங்கலந்து இலையில் இடுதல்வேண்டும் இவ்வாறு செய்துவருவோர்க்குச் சனி பீடை தொலைந்து நலமுண்டாகும்.

## பல்கலைக்கழக...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதன் மூலம் தமிழ்ப் பிரதேசங்களின் நிர்வாகத்திற்கு குடியேற்றம், பொலிஸ் அதிகாரம், வேலைவாய்ப்பு போன்ற பல அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. அதுமட்டுமல்ல இந்திய உம்சாஇழித் தமிழர் தங்களைத் தாங்களே நிர்வகித்து அவர்களது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள ஆணைக்குழு ஒவ்வொன்றும் நியமிக்கப்படவுள்ளதாம். அப்படிச் செய்யப்பட்டால் எமக்கு அரசாங்க காரியங்களே மாத்திரமே எஞ்சும்" என்றார். (ச)

## இதோ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவுன்ஸில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் திருகோணமலையில் அதிகார அலுவலகம் சட்டம், ஒழுங்கு, நிலம், வேளாண்மை, தொழில், கல்வி, கலாச்சாரம் இவை பற்றி பின்னர் விவாதிக்கப்படும்.

ஸ்ரீலங்கா அரசுத்தலைவரின் நன்மதிப்பைப் பெற்றவர், பெரும்பான்மை வாக்குப்பலம் பெற்றுள் தலைமைப் பதவி. நிதி, வரி உரிமைகள் உண்டு. வெளிநாட்டுக் கடனுக்கு ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் அனுமதிபெற வேண்டும்.

ஸ்ரீலங்காச் சட்டங்களை மீறநடந்தால் மாகாணக் கவுன்ஷிலை கலைக்கும் அதிகாரம் ஸ்ரீலங்கா அரசுத்தலைவருக்கே உண்டு.

இன்று 44-வது நாளாக வெலிக்கடைப் போராட்டம் நடைபெறுகிறது. (மா)

## ஒன்றரை கோடி-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு நிதிக்கு தமிழ்நாட்டு மக்கள் இயன்றளவில் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார்.

நிதி சேகரிப்பவர்கள் தமிழ்நாடுஅரசினால் அனுமதி பெற்ற உண்டியல்களை எடுத்துவருவார்கள் என்றும் அப்போது அவர்களுக்குத் தாராள நிதி உதவி செய்யுமாறும், அல்லது ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் காசோலை மூலமாக இந்நிதிக்கு பணம் அனுப்புமாறும் அவர் மக்களை கேட்டுள்ளார்.

## உண்ணாவிரதம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது: "பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அமைச்சர்கள் பின்வாங்குகின்றனர். பொறுப்புகள் தமது தலையில் விழுந்து அதனால் தமது எதிர்கால அரசியல் வாழ்க்கை பாதிக்கப்படும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

"இன்று வெலிக்கடைச்சிறையில் கைதிகள் பலர் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கின்றனர். அதை நீங்கள் மறுக்க முடியாது. இவர்களின் நிலை பற்றி நீங்கள் அறியத்தரவேண்டும். ஒருவரைச்சிறைச்சாலைக்குள் எடுக்கும்போது அவரது உயிருக்கான பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் என்பதை மறக்கக் கூடாது. 1983 ஜூலை வெலிக்கடையில் நிகழ்ந்த படுகொலைகள் மீண்டும் அங்கு இடம்பெற சந்தர்ப்பமளிக்கக் கூடாது. தமிழ்த்தீவிரவாதிகள் 600க்கு மேற்பட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதேபோல் 18 மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது விசாரணை செய்யப்படவேண்டும். வவுனியாவில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி ஆராய குழுவொன்றை அனுப்பிவைத்தீர்கள். அதன் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. அறிக்கை வெளியிடாவிட்டால் குழுவை அனுப்பி என்ன பலன்? என்றார். (பெ - ச)


## கடைசி நேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இல:- 522543827V சின்னத்துரை விஜயரட்ணம் 70, பாங்சால் வீதி. யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டையும், டிறைவிங் லைசென்ஸ் இல. 472804 கார் பாஸ்ஸும், வெள்ளை நிறப் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காந்தி சபே, 41, ஞானிஸ்வரா லேனில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (834)

## முதலாண்டு நினைவஞ்சலி

R. T. செல்லத்துரை
(நல்லையன்)



மலர்வு:
1928—11—10

உதிர்வு:
1984—09—21

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்" வெளி: 14 : 13

எங்கள் அன்புத் தெய்வமே எம்மைவிட்டு இறைவனடி சென்ற உங்களை நாங்கள் எங்கள் இதயங்களில் என்றுமே நினைவு கூர்வோம்.

அவரின் பிரிவால் வாடுகின்ற:
மனைவி, பிள்ளைகள், தம்பிமார்,
மைத்துனர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

நல்லாவிஸ்.
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

818

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் நிலாவெளி இருந்ததா?

(கொழும்பு)

"1971ம் ஆண்டு ஜே. வி. பி யினர் நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி தமது பொறுப்பில் வைத்திருந்தனர். இதே நிலையைத்தான் தமிழ் தீவிரவாதிகள் நிலாவெளியிலும் கடைப்பிடித்தார்கள். இதுவே அவர்களுக்கு தோல்வியாகவும் முடிந்தது" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் குழு அறையில் அவர் நேற்று முன் தினம் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து பேசுகையில்; "நாட்டின் ஒரு பகுதியை வைத்திருப்பது கடினமானது. இதனைத் தீவிரவாதிகள் மேற்கொண்டார்கள். நிலாவெளியில் தீவிரவாதிகள் முகாம்கள் தாக்கப்பட்ட போது பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

## "விரதம் பிடித்து வேலைக்குச் சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை"

### மரணவிசாரணையில் மனைவி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"என் கணவருக்கு வேறு பெண்களின் தொடர்பு எதுவும் இடையாது. என்னையும் எனது ஐந்து குழந்தைகளையும் நேசித்து அன்புடன் அவர் கவனித்துவந்தார்".

நல்லூரைச்சேர்ந்த பரராஜசிங்கம் யோகேந்திரன் (ரஜனிகாந்த்) (வயது 36) என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது மனைவி வரலட்சுமி 32 வயது) மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி க. கேசவன் முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

திருமதி. வரலட்சுமி மேலும் கூறியதாவது: "இம் மாதம் 15ம்தேதி ஞாயிற்றுக்கிழமை அவர் ஆவணி ஞாயிறுவிரதம் பிடித்திருந்தார் காலையில் அரிசி மரக்கறி வாங்கித்தந்துவிட்டு வேலைக்குச்சென்றார்.

"அவர் நல்லூர் சந்தையில் ஒரு இரும்புத்தொழிற்சாலை வைத்திருந்தார் நண்பகல் அவர் வீட்டிற்கு வரவில்லை. பிற்பகல் 8 மணிக்கும் வரவில்லை. நல்லூர் தொழிற்சாலையிலும் அவர் இல்லை என்று அறிந்தேன்"

"பிற்பகல் 6 மணிக்கு புதுச் செம்மணித்தெரு சந்தியில் அவரது சடலம் இருப்பதாக அறிந்தேன் சடலத்தில் வெட்டுக் காயங்களும், சூட்டுக்காயமும் இருந்தது. எங்களுக்கு எதிரிகள் எவரும் இல்லை எவர் மீதும் சந்தேகம் இல்லை."

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (க)

## சிறையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலித் அத்துலத்முதலிபாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

அவசரகால நிலை நீடிப்பு மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசியபோது அவர் மேலும் கூறியதாவது: "பயங்கரவாதிகளும் அவர்களுடைய ஏஜன்டுகளும் இந்தவிதமான தப்பான ஒரு கதையை யாழ்ப்பாணத்தில் கட்டியிருக்கிறார்கள். எமது பாதுகாப்புத் துறையை நாம் பலப்படுத்தி வருகிறோம். தொடர்ந்தும் அதைப் பலப்படுத்தியே வருவோம் என்றார். ச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## 2 லட்சம் கொள்ளை

யாழ் நகரிலுள்ள வர்த்தகர் எஸ். வி. முருகேசுவுக்குச் சொந்தமான பொருட்களே கொள்ளையடிக்கப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் அல்லைப்பிட்டிச்சந்தியில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. (மா

## தமிழ்நாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது. அன்று காலை 6மணியிலிருந்து மாலை 6 மணி வரை தமிழ்நாட்டில் சகல அரச தனியார் துறை பணிகளும் நிறுத்தி வைக்கப்படும். ஆயினும் அத்தியாவசியப் பொதுத்துறைகளுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

## இலங்கை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கூட்டுமுன்னணி கருத்து

யுத்த நிறுத்தக்கண்காணிப்புப் பணியை செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சாவதேச அமைப்பொன்றே பொறுப்பேற்க வேண்டும் என்றும் இலங்கை அதிகாரிகளைக் கொண்ட குழு அமைக்கப்படுவது வெறும் கண்துடைப்பாகவே இருக்கும் என்றும் ஈழம்தேசிய விடுதலை முன்னணி பேச்சாளர் நேற்றிரவு புதுடில்லியிலிருந்து வெளியிட்டார்

### அமிர் கருத்து

இதனிடையே இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக நல்லசெய்தி புதுடில்லியில் இருந்து வரவேண்டும் என்று தாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம் சென்னையில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதுகாரணமாக நேற்றுக் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'பொலிட் பீரோ' கூட்டத்தில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## கேள்விப் பத்திரங்கள்

யாழ் மாவட்டத்தில் அவசர தெருக்கள் திருத்த வேலைக்குத் தேவைப்படும் 4 500 தார் பீப்பாக்களை கொழும்பிலிருந்து லொறிகளில் கொண்டுவரவேண்டியுள்ளது.

இவ்வேலையை ஏற்கத் தயாராகவுள்ள லொறிச் சொந்தக்காரர்கள் தமது எழுத்துமூலமான கேள்விப் பத்திரத்தை பீப்பா ஒன்றுக்கான வீத அடிப்படையில்) 27 - 09 - 85 ம் திகதி பி. ப. 2 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக

அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்: கடித உறையின் இடதுபக்கத்தில் "தார் ஏற்றுவதற்கான கேள்விப்பத்திரம்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

அரசாங்க அதிபர்

கச்சேரி, யாழ்ப்பாணம்:
20 - 09 - 1985. 835

## முக்கிய அறிவித்தல்

வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினரிடமிருந்து எந்தப் பொருளையும் நாம் தருவிப்பதோ பாரமெடுப்பதோ இல்லை எவராவது எமது ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி பொருட்கள் வந்துள்ளதாக சொல்பவரிடம் பணம் கொடுத்து ஏமாந்தால் அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல.

S. சுலைமான்கண்டு அன் பிறதர்,
(833) யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### அம்பியபாகு இலச்சுமிப்பிள்ளை


சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பியபாகு இலச்சுமிப்பிள்ளை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21-9 85) பி ப. 4 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் இடம்பெறும்.

[838] 'மனோன்மணி வாசா', கொக்குவில் கிழக்கு.

## மரண அறிவித்தல்

### இராமு தர்மகுலசிங்கம்

(தலைவர், யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்)



தோற்றம்:
20-12-1948

மறைவு:
20-9-1985

இவர் காலஞ்சென்ற இராமு, பூமணி தம்பதிகளின் அன்பு மகனும், வனஜாவின் அன்புக் கணவரும், ஜலட்சுமி (வேம்படி மகளிர் கல்லூரி), நிசாந்தினி (யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), ஜெயந்திரன், பிரதீபன் (யாழ் மத்திய கல்லூரி), துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணம் (உத்தரவு பெற்ற வியாபாரி, மணியம் (கரக்காலை), காலஞ்சென்ற சிவலிங்கம், நிர்மலா, சகுந்தலா, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நடராசா, தங்கமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலேந்திரன் (இந்திரன் திருப்பதி), தேவராசன் (பிரான்ஸ்), விஜயன் (யாழ் மாநகர சபை, தநாயகி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 21 9 85 சனிக்கிழமை (இன்று) பி ப 4 00 மணியளவில் இல 15 குளம் லேன், கொட்டடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக கல்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பவ.வுக் கூட்டுறவுச் சங்கத்தினர்
(836)

## மரண அறிவித்தல்

### திரு. செல்லையா முத்துக்குமாரசாமி

இளைப்பாறிய ஓடிட்டர் ஜெனரல்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முன்னாள் இளைப்பாறிய ஓடிட்டர் ஜெனரல் செல்லையா முத்துக்குமாரசாமி காலமாகிவிட்டார். இவர் அருளின் அன்புக் கணவரும், Dr. சந்திரவதனி (அரசினர்வைத்தியசாலை யாழ்ப்பாணம்), பத்மினி, Dr. சச்சிதானந்தம் (U.K), Dr. மகேந்திரன் (U. K) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவகடாட்சம் (Accountant Cargo Board Despatch Co Ltd, Colombo), Dr. கணேசன் (கொழும்பு) Dr. பானுமதி (U. K) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-09-1985 (இன்று) சனிக்கிழமை காலை 9-00மணிக்கு அன்னாரின் "அருளகம்", வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாற்று மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 831

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா ஞானசுந்தரம்

திருமதி செல்லம்மா ஞானசுந்தரம் காலமானார். இவர் கொக்குவில் காலஞ் சென்ற சட்டத்தரணி ஞானசுந்தரம் அவர்களின் பாரியாரும், காலம் சென்ற அப்பர் பலாங்கொட தோட்ட உரிமையாளர் தந்தையாரினதும், பாரியாரினதும் சிரேஷ்ட புத்திரியும், ஞானம்பிகை, ஞான ரஞ்சிதம், ஞானபாக்கியம், ஞானசகுந்தலா, காலம் சென்ற ஞானசம்பந்தன், ஞானம்பாள் ஆகியோரின் அன்புத்தாயாரும், கலாநிதி பெருமாள் பிள்ளை (அவுஸ்திரேலியா), மயில்வாகனம் (முதல் திருவாகி - கணிச்சீர்திருத்த ஆணைக்குழு) பாலசுப்ரமணியம் ஸம்பியா, காலஞ்சென்ற சட்டத்தரணி ராமச்சந்திரன், மகேந்திரன் (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 22 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றாரும் உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். 837

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126